செய்தி வெளியீடு எண்:378 நாள். 10.7.2009

## செய்தி வெளியீடு

## சென்னை மாநகராட்சியின் சார்பில், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் விழா

12.7.2009 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை, சென்னையில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில், கீழ்க்கண்டவாறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஏழை–எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்கள். இவ்விழாவில் சென்னை மாநகராட்சியின் துணை மேயர் திருமதி சத்தியபாமா அவர்கள், நாடாளுமன்ற–சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் விழா நடைபெறும் இடங்கள்:

1. 12.7.2009 – காலை 10 மணி – அங்காளம்மன் கோயில் தெரு, கே.எம்.கார்டன், பட்டாளம், சென்னை.

2. 12.7.2009 – காலை 10.30 மணி – மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, வ.உ.சி.சாலை, சென்னை–79.

3. 12.7.2009 – காலை 11.00 மணி – சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, கல்யாணபுரம், எஸ்.எம்.நகர், மெயின் ரோடு, சென்னை–39.

*****************

வெளியீடு :

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9